IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.361/2023

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | RAJU |
| FATHER'S NAME | : | GAJENDIRAN |
| VILLAGE | : | PERNAMBUT |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 28th day of April 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2022ஆம் வருடம் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ரவி மற்றும் உதவி ஆய்வாளர் தேவராபிரசாத் ஆகியோர் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்றுவிட்டதால் அவருடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 17.07.2022 அன்று பகல் 01.00 மணியளவில் இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திரு.ரவி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பேர்ணாம்பட்டு அரசுமருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலின்பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில்இருந்த ஹரிஷ், த/பெ.ரமேஷ் கொடுத்த புகார் வாக்குமூலம் அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.316/2022 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

அன்றைய தினமே பகல் 02.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் சக்திவேல் மற்றும் விஷ்ணு ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் சாட்சிகள் ஹரிஷ், ராஜேஷ்குமார், தமிழ், ஆனந்தன், அஜித்குமார், அருண், மகி, கார்த்திக், சக்திவேல் மற்றும் விஷ்ணு ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில்

இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை பின்பு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரதாப்குமார் என்பவரை விசாரித்து விபத்து பதிவவேடு மற்றும் காயசான்றிதழ் பெற்றார். இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், அ.சா–1ற்கு வழங்கிய விபத்து பதிவேடு ஆகவும், அ.சா.ஆ.6 ஆகவும், காயசான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.